பிங்கிரிய பிரதேச சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பிங்கிரிய பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பிங்கிரிய பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுடன் இணங்காமை

உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையினால் தொடரப்பட்டிருந்த 05 வழக்குகள் காணப்பட்டதுடன் அதற்காக ரூபா 106,670 சபையின் நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. இந்த வழக்குகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	கட்டுப்படுத்த முடியாத காரணத்தின் அடிப்படையில் இந்த வழக்கு நடவடிக்கைகள் தொடர்ந்தும் தீர்வு வழங்கப்படாத முறையில் நடாத்திச் செல்ல வேண்டி ஏற்பட்டிருந்தது.	வெளித்தரப்பினர்களுடன் மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டில் ரூபா 147,500 தொகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கையுடனான 50 பிளாஸ்டிக் கதிரைகள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் இந்த குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஆயுர்வேத மருந்து இருப்பு பெறுமதி கணிப்பிடப்பட்டு இறுதி இருப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் இந்த குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	பெறுமதி ரூபா 20,300 ஆன களஞ்சிய இருப்பு விடயங்கள் 04 இன் பெறுமதி கணக்கீடு	2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் இந்த குறைபாடுகளை சரி	சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

செய்யப்படாமையாலும் 06 இருப்பு விடயங்களின் பெறுமதி ரூபா 74,251 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டமை மற்றும் 12 இருப்பு விடயங்களின் பெறுமதி ரூபா 652,991 அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1988 இன் பிரதேச சபைகள் நிதி மற்றும் நிர்வாக விதியின் 218 ஆம் விதி	நியமிக்கப்பட்ட சபை ஒன்றினால் வருடாந்தம் காணி கட்டிடங்கள் தொடர்பான மெய்மையாய்வு மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தில் பிரதேச சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை			
(i)	நிதிப்பிரமாணம் 571	செயல் நிமித்த உபகட்டுநிதி பணிகள் முடிவடைந்தவுடன் தீர்த்து வைக்க வேண்டியிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டுக்கு முன் வழங்கப்பட்ட முற்பணம் ரூபா 357,656 மற்றும் பல வருடகாலமாகக் கொண்டு வரப்படுகின்ற ரூபா 804,925 இனங்காணப்படாத முற்பண மீதி ஒன்றும் காணப்பட்டது.	பரீட்சித்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	நிதிப்பிரமாணம் 571 (2)	பெறுமதி ரூபா 124,136 ஆன காலாவதியான 05 வைப்புக்களை ஓய்வு பெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	காலாவதியான வைப்புக்களை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	மேற்படி
(இ)	அரச நிர்வாக சுற்றறிக்கை			
	2002 பெப்பரவரி 25 ஆந் திகதிய இலக்கம் 1/2002 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கை	சபையில் 06 வாகனங்களுக்காக வருடாந்த வருமான அனுமதிப் பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.	விரைவாக அந்த குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கையின் பிரகாரம் வருமான அனுமதிப் பத்திரம் பெறப்படல் வேண்டும்.

(ஈ)	2018 திசெம்பர் 31 ஆந் திகதி இலக்கம் 04/2018 என்ற நிதி, ஊடகத் துறை அமைச்சினால் வினியோகிக்கப்பட்ட சொத்துக்கள் முகாமைத்துவம் தொடர்பான சுற்றறிக்கை மற்றும் கொம்ரோலர் ஜனரால் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட சொத்துக்கள் மதிப்பீடு செய்யும் வழிகாட்டியின் 2 ஆம் பிரிவு	அரசாங்கத்தின் நிதியல்லாச் சொத்துக்களை அறிக்கையிடும் போது அவற்றின் பெறுமதி சரியாக கணிப்பிட வேண்டி இருந்த போதிலும் சபையின் வாகனங்கள் தவிர ஏனைய சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வில்லை.	அதற்குரிய ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் மதிப்பீட்டுக் குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.	வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	2010 யூலை 30 ஆந் திகதிய இலக்கம் 2010/02 என்ற உள்ளூராட்சித் திணைக்கள சுற்றறிக்கை	சகல சொத்துக்கள் தொடர்பாகவும் வருடாந்த மெய்மையாய்வை நடாத்துதல், குறித்துரைத்த சொத்துக்கள் அளவு காணப்படுகின்றதா என காணி அளவினை மேற்கொண்டு உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான 106 காணிகளில் 17 காணிகள் மாத்திரம் மெய்மையாய்வு செய்யப்பட்டிருந்தது.	சபையிடம் காணப்படுகின்ற சகல சொத்துக்கள் தொடர்பாகவும் 2025 ஆம் ஆண்டில் மெய்மையாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சகல சொத்துக்களும் மெய்மையாய்வு செய்து உரித்து மற்றும் இருப்பினை உறுதிப்படுத்துதல் வேண்டும்.
(ஊ)	வடமேல் மாகாண நீர் வளங்கள் மற்றும் சுற்றாடல் சுகாதார பிரிவினால் சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருந்த வழிகாட்டியின் 2.2.2(iv) பந்தி மற்றும் 9.2(v) ஆம் பந்தி	சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டு அறிக்கையின் பிரதி சபைக்கு பெற்றுக் கொள்ளப்படாமை, சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் கணக்குகள் கணக்காய்விற்காக சபைக்கு சமர்ப்பிக்க முடியாமை, சமூக அடிப்படையிலான அமைப்புக்களை பதிவு செய்யாமை மற்றும் மேற்பார்வை செய்யப்படாமை என்பன அவதானிக்கப்பட்டன.	எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 22,781,804 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 40,744,083 ஆகும்.

2.2 நிதிக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபைக்குரிய வங்கி நடைமுறைக் கணக்கிற்கு உரிய இணக்கக் கூற்றுக்களில் 18 வருடங்களுக்கு அண்ணளவான காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற ரூபா 181,846 இனங்காணப்படாத வேறுபாட்டை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த இனங்காணப்படாத ரூபா 181,846 வேறுபாடு 18 வருடங்களுக்கு அண்மித்த காலமாக கொண்டு வரப்படுவதுடன் உள்ளூராட்சித் திணைக்களத்தின் புலனாய்வு உத்தியோகத்தரினதும் உதவியைப் பெற்று சரி செய்வதற்கு முயற்சிக்கப்பட்ட போதும் அந்த தகவல்களை கண்டறிவதற்கு முடியாதிருந்தது.	இனங்காணப்படாத வங்கி மீதி தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்

2.3 வருமான நிருவாகம்

2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 97.5 மில்லியன் ஆக இருந்ததுடன் அந்த மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் சிட்டையிடப்பட்ட ரூபா 09 மில்லியன் அதாவது 9 சதவீதம் அளவிலான சிறிய சதவீதம் ஒன்று மாத்திரம் ஆகும்.	குறித்துரைத்த ரீதியில் சிட்டையிடப்படாத எனினும் மாதாந்தம் சேகரிக்கப்படுகின்ற வருமானத்தை சிட்டையிடலாக பதிவேடுகளுக்கு கொண்டு வந்திருந்த போதும் அந்த தகவல்கள் உரிய அட்டவணையில் குறிப்பிடப்படாமை இதற்கான காரணமாக இருந்தது.	சரியாக மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட வருமானம் கடந்த ஆண்டில் இறுதியில் நிலுவை வருமானத்துடன் சேர்க்கப்பட்டு சேகரிக்கப்பட்ட வருமானம் கழிக்கப்பட்ட பின்னர் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வருமானம் பெறப்படுகின்றது. சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி இந்த தொகைகளுக்கு இடையே பரஸ்பர வேறுபாடுகள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.	சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்களில் காணப்படுகின்ற வேறுபாடுகளை சரி செய்து சமர்ப்பிக்கப்படும்.	சரியான தகவல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(இ)	**ஆதனவரி** ஆதனவரி மதிப்பீடு 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீட்டுத் திணைக்களத்தை வரவழைத்து மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டில் ஆதவரி மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு தற்போது ஆதனவரி அறவிடப்படுவதுடன் ஆதனவரி மதிப்பீடு காலரீதியில் மேற்கொள்ளாமையால் ஆதனங்களின் தற்போதைய நிலைமை மாற்றம் அடைந்ததன் அடிப்படையில் கணிப்பிட முடியாத ஆதனவரி வருமானம் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது.	ஆதனவரி வரி மதிப்பீடு அரசாங்கத்தின் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்வதற்காக 2024.05.29 ஆம் திகதி கட்டணம் செலுத்தி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.	05 வருடங்களுக்கு ஒரு தடவை ஆதவரி மதிப்பீடு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(ஈ)	**வாடகை** 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 344,091 நிலுவை மீதி ஒன்று அறவிட வேண்டி இருந்தது.	மேலும் அறவிட முடியாத நிலுவைகளை தனித்தனியாக இனங்காண்டு வாடகையாளர்கள் மரணமடைந்துள்ள ஆதனங்களுக்கு உரிய நிலுவைப் பணத்தை பதிவழிப்பதற்காக தற்போது பதவியணியினர் நடவடிக்கை எடுக்கின்றனர்.	நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உபவிதிகள் விதிக்க வேண்டி இருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 28 விடயங்களுக்காக சபை உபவிதிகளை விதித்திருக்க வில்லை.	சபையின் தேவையின் பிரகாரம் ஏற்றுக் கொள்ளப்பட்ட உபவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதுடன் தற்போது தும்புக் கைத்தொழில் ஒழுங்கமைத்தல் உபவிதி, வாராந்த சந்தை உபவிதி மற்றும் பிங்கிரிய பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதிகள் மற்றும் மதகுகள் தொடர்பான இடையூறுகளை தடுப்பது தொடர்பான உபவிதி என்பன அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	உபவிதிகளை விதித்து சபையின் நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையின் 05 சொத்து விடயங்கள் மற்றும் பொறுப்பு விடயத்தின் பட்டோலைகள் நாளது வரையாக பேணிச் செல்லாமையின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும் பட்டோலைகளின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 32,638,324 வேறுபாடு காணப்பட்டது. இந்த வேறுபாடுகளைத் தீர்த்து வைப்பதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.	நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட கணக்கு விடயங்களின் மீதிகளுக்குரிய பட்டோலைகளுடன் இணங்காமையால் பல வருட காலம் முதல் கொண்டுவரப்படுவதுடன் 2025 இன் நிதிக்கூற்றுக்களின் போது கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சகல கணக்கு விடயங்களுக்கும் பட்டோலைகளுக்கும் இடையே இணக்கம் இன்மைகள் மேலும் இனங்கண்டு வேறுபாட்டைக் குறைத்துக் கொள்வதற்கும், சரி செய்வதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கு விடயங்களினதும் பட்டோலைகளும் இடையிலான இணக்கமின்மைகளை இனங்கண்டு சரி செய்தல் வேண்டும்.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(ஆ)	மீள்ய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 05 கணக்குகளில் ரூபா 12,951,100 மீதி காணப்பட்டதுடன் அதில் 01 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலத்திற்குரிய ரூபா 12,208,795 மீதி மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 742,305 மீதியும் காணப்பட்டது.	காணப்படுகின்ற நிலுவை மீதிகளை அறவிடுவதற்காக உத்தியோகத்தர்களுக்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளது.	நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 04 கணக்குகளில் ரூபா 74,483,604 மீதி காணப்பட்டதுடன் அதில் 01 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலத்திற்குரிய ரூபா 65,398,868 மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 9,084,736 தொகையும் மேலும் செலுத்த வேண்டி இருந்தது.	உரிய மீதிகள் பரீட்சிக்கப்படுவதுடன் பரீட்சித்து நடவடிக்கை எடுக்கப்படும்.	இருப்பினை இனங்கண்டு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	அபிவிருத்தித் திட்டம் அங்கீகரிக்கப்படாமல் 01 ஏக்கர் 01 றூட் 27.20 பேர்ச் அளவான வெல்லறாவையில் அமைந்துள்ள கஹட்டகஹயாய காணிப் பகுதி விற்பனை செய்யப்பட்டிருந்தது.	ஏலதாரர் நிறுவனம் காணி அபிவிருத்தி செய்வதற்காக 2021 யூலை 06 ஆந் திகதி தேவையான தகவல்களுடன் விண்ணப்பித்திருந்ததுடன் அதற்காக சபையின் பிரதான முகாமைத்துவ சேவை உத்தியோகத்தரால் 2021 யூலை 08 ஆந் திகதி அபிவிருத்தி நிபந்தனைகளை பெற்று கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	காணிக கூறுகளாக்கும் நடவடிக்கைகளை முறையாக மீளாய்வு செய்தல் வேண்டும்.

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பெறுமதி ரூபா 3,206,000 ஆன மோட்டார் வாகனமும் வண்டியும், சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்படாமல் இருந்ததுடன் இயந்திர உபகரணங்கள் மற்றும் மோட்டார் வாகனங்களுக்கு நிலையான சொத்துப் பதிவேடும் நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை.	இந்த ஆதனங்கள் சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	சொத்துக்கள் பதிவேட்டை நாளது வரையாகப் பேணிச் செல்ல நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(ஆ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்குரிய 99 மயான நிலங்கள் காணப்பட்ட போது அந்த மயான நிலங்களை சபைக்கு கையேற்கப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	மயான நிலங்கள் தொடர்பாக தர அறிக்கையினை வழங்குமாறு பிரதேச செயலாளரால் பிரதேச சுகாதார வைத்திய உத்தியோகத்தர்	சபை பராமரிக்கின்ற மயான நிலங்களை முறையான பிரகாரம் சபைக்கு கையேற்றல் வேண்டும்

		அலுவலகத்திற்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. அந்த அறிக்கை கிடைத்த பின்னர் முறையான பிரகாரம் உரித்துறுதி தயாரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.	
(இ)	2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலம் சபைக்குச் சொந்தமான 06 வாகனங்களுக்காக பதிவு சான்றிதழ் பெறப்பட்டிருக்கவில்லை.	பதிவு செய்வதற்கு தேவையான தகவல்கள் காணப்படாமையினால் அந்த வாகனங்கள் பதிவு செய்வதற்கு முடியாதிருந்தது.	சபைக்குரிய வாகனங்களுக்காக பதிவு சான்றிதழ் பெறப்படல் வேண்டும்.

3.4 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**சபையின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 23 வெற்றிடங்களும் 20 மிகையும் காணப்பட்டதுடன் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்த்தல் மற்றும் அங்கீகரித்த பதவியணியினரை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	இந்த அங்கீகரிக்கப்பட்ட பதவியணியைத் திருத்திக் கொள்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது.	வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் மிகை ஊழியர்களை அங்கீகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	பல வருட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற ரூபா 249,853 இனங்காணப்படாத ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	இனங்காணப்படாத ஊழியர் கடனை பரீட்சித்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்	அறவிட வேண்டிய மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**சபையின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	2024 ஆம் ஆண்டில் நிதியேற்பாடாக ரூபா 1,650,000 ஒதுக்கி மேற்கொள்ளவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 07 நிகழ்ச்சித் திட்டங்கள் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.	உரிய அங்கீகாரம் கிடைக்காமை அரச செலவினங்களைக் கட்டுப்படுத்தல் அடிப்படையில் கைவிடப்பட்டமைக்கான காரணமாகும்.	பாதீட்டின் மூலம் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டுள்ள மற்றும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்திட்டங்கள் நிறைவேற்றப்படல் வேண்டும்.
(ஆ)	சபை 2024 ஆம் ஆண்டுக்கு உரியதாக தயாரித்திருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 21 விடயங்களுக்கு உரிய பௌதீக செயல் முன்னேற்றம் 50 சதவீததிற்கும் குறைவான மட்டத்தில் காணப்பட்டது.	03 செலவின விடயங்களின் செலவினத் தலைப்புகளுக்கு மாற்றப்பட்டதுடன் ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்காது இருந்தமையால் 02 செயற்திட்டங்களை மேற்கொள்ள முடியவில்லை. 06 நிகழ்ச்சித் திட்டங்கள்	வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	கடன்கொடுத்தோர் ஆக்கப்பட்டுள்ளது. ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு யாவும் செலவிடப்படாது இருந்த போதும் மிகுதி 10 நிகழ்ச்சித் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.	

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீண்டெழும் மற்றும் மூலதன செலவின விடயங்களின் பயன்பாட்டில் முரண்கள் ஒட்டுமொத்த செலவின விடயங்கள் 154 இல் 91 விடயங்களும், 50 சதவீதத்திற்கு மேல் காணப்பட்டமையால் வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிக்கும் போது நிதிப்பிரமாணம் 50(i), 50(ii) மற்றும் 50(iii) இல் காண்பிக்கப்படுகின்ற விடயங்கள் தொடர்பில் போதியளவான கவனம் செலுத்தப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்படவில்லை.	செலவின மதிப்பீடு தயாரிக்கும் போது நிதிப்பிரமாணம் தொடர்பாக கவனம் செலுத்தி தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	செலவின மதிப்பீடு சரியாக தயாரிக்கப்படல் வேண்டும்.

4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030 நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக மீளாய்வாண்டில் திட்டமிடப்பட்ட 30 செயற்திட்டங்களுக்கு இடையே 13 செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	ஒதுக்கப்பட்ட செலவின நிதியேற்பாட்டின் பிரகாரம் நிலைபேறன அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.